ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பரட்டை : தலித் நாடக முன்னோடி

கு. சின்னப்பன்
கல்வியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 010, தமிழ்நாடு, இந்தியா

*ஆய்வுச் சுருக்கம்*

*பரட்டை தலித் மக்கள் அன்றாடம் சந்திக்கும் வாழ்வியல் பிரச்சனைகளை அவர்களின் கலாச்சாரத்தோடே, தன் நாடகங்களில் உலவவிட்டு அவர்களின் உளவியலை உலகமறியச் செய்தவர். இவரின் நாடகப் பங்களிப்பைப் பற்றி ஆராய்ந்து எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆதிக்கச் சாதியினரால் புறக்கணிக்கப்பட்ட தலித் மக்களின் கூத்து, இசைக் கருவிகள், சிறு தெய்வ வழிபாட்டு மரபுகள், கலைகள் போன்றவற்றை அறிவர் அம்பேத்கரின் நூற்றாண்டு எழுச்சிக்குப் பிறகுதான், தலித் மக்கள் மீட்டெடுத்து வருகின்றனர். நாடகம் எழுதுதல், நடித்தல், இயக்குதல், பாடல் இயற்றுதல், இசை அமைத்தல் எனப் பல பரிமாணங்களைக் கொண்ட பரட்டை 1975 முதல் 2005 வரைத் தலித் நாடக முயற்சிகளில் ஈடுபட்டுத் தலித் மக்களின் வாழ்வியல் சார்ந்த கருத்தியல்களோடு முப்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை நிகழ்த்தியுள்ளார். இதனால் இவரைத் தலித் நாடக முன்னோடி என உறுதிப்படக் கூறலாம் என்னும் கருதுகோளினைக் கொண்டு விவரிப்பு ஆய்வு முறைமையைப் பின்பற்றி இக்கட்டுரை அமைகிறது. பரட்டையின் நூல்கள், கட்டுரைகள், எழுதி இயக்கி நடித்த நாடகங்கள் முதன்மைத் தரவுகளாகவும் அவரைப் பற்றி வெளிவந்த செய்திகள், கட்டுரைகள், நூல்கள் துணைமைத் தரவுகளாகவும் அமைகின்றன. பரட்டையின் நாடகம் சமகாலப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு அமைந்திருக்கும். நகைச்சுவையோடு இறையியலும் சமுதாயப் பார்வையும் இணைந்த கதையம்சம் கொண்டிருக்கும். எளிமையான அரங்கையும் பொருளாதாரச் சிக்கனத்தையும் பெற்றிருக்கும் என்பதை முடிவாகக் கூறலாம்.*

*திறவுச் சொற்கள்: பரட்டை, தலித், இறையியல், நையாண்டி, நடமாடும் நாடக அரங்கு, சேரிப்புறவியல், கலகம்.*

## முன்னுரை

*ஜேம்ஸ் தியோ ஃபிலஸ் அப்பாவு எனும் இயற்பெயருடைய ‘பரட்டை’ 1979இல் தனது இறையியல் கல்வியை முடித்து, சின்ன உடைப்பில் உள்ள கிராமிய இறையியல் நிறுவனத்தில், திட்ட அலுவலராகப் பணியாற்றும் வாய்ப்பை பெற்றார். அப்பொழுது இங்கிலாந்து ஜாய்ஸ்பீலின் நாடகத்தை வேண்டாம் இந்தக் காணிக்கை எனத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து தம் நாடகப் பணியைத் தொடங்கினார். ‘ஒரு புல்லாங்குழல் அடுப்பு ஊதுகிறது’ (1975) நாடகத்தை முதன்முதலில் மதுரை, தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் அரங்கேற்றினார்.*

*1975 முதல் 2005 வரைத் தலித் நாடக முயற்சியில் ஈடுபட்டு, தலித் மக்களின் வாழ்வியல் சார்ந்த கருத்தியல்களோடு முப்பத்துக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி இயக்கி நடித்து நிகழ்த்தியுள்ள பரட்டையின் நாடகப் பங்களிப்பை தலித்திய நாடக முன்னோடி பரட்டை என்னும் நோக்கில் விவரிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

மரபு அரங்கு

பரட்டை, நாட்டுப்புறக் கதையாடல், தெருக்கூத்து மற்றும் நாட்டுப்புறக் கலை வடிவங்கள் ஆகியவற்றின் ஊடாகத் தமது சமூகப் பணியை மய்யமாக்கினார். ராஜாராணி ஆட்டத்தை வடிவமாகக் கொண்டு புதிய உத்திகளைக் கையாண்டு 'பிச்சை எடுத்த ராணி' (1979), 'கூலி உயர்வு சுந்தரி' என்கிற இரண்டு தெருக்கூத்துக்களை மதுரை சின்ன உடைப்பில் நிகழ்த்தினார். இவ்விரண்டும் நேரடியாகத் தலித் பிரச்சனையைப் பேசின.

பரட்டை, 1980களில் தமிழகச் சூழலில் நாட்டுப்புறவியலை (சேரிப்புறவியல்) கலை இலக்கியங்களில் அறிமுகப்படுத்தியவர். நாட்டுப்புறவியலின் உட்கூறுகளை மொழிநடை, குறியீடு, அடையாளப் பதிவுகள் ஆகியன எதை நோக்கியதாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் கொண்ட இவர்,1985ல் நிமுந்து நட பாடல் தொகுப்பை வெளியிட்டார். மேலும், மாற்றத்துக்கான நாட்டுப்புறவியல் (1985) என ஆங்கில நூல் வெளியிட்டுள்ளார். ஜப்பானில் உள்ள கோயோடோ சி.சி.ஏ.அரங்கில் 'நோவா' (Nova) (1985) என்கிற நாட்டுப்புற நாடகத்தை நிகழ்த்தினார்.

வீதி நாடகங்கள்

1981இல் இவர் நடத்திய சங்கிலி ராமன், கல்லோவியம், வில்லியம் கேரி, நரகிரி (1983) போன்ற வீதி நாடகங்கள் சில மணித்துளிகளில் மக்கள் முன் கருத்தைப் பரப்பிச் செல்லும் ஊடக வலிமையைப் பெற்றிருந்தன.

கிறித்துவ மேடை நாடகங்கள்

பாரம்பரியமாகப் பின்பற்றப்படும் திருவிவிலியச் சிந்தனைகளை, கிறித்துவ வழிபாடுகளை, பகுத்தறிவுப்படுத்தி நய்யாண்டித் தன்மையுடன் பலமேடை நாடகங்களை உருவாக்கியுள்ளார். 'ரோமன் கத்தோலிக்க லுத்தரன்', 'நிறமற்றப் பூக்கள்', 'யாருங்கோ கொல்லப்போறது சாதியை'?, 'ஒருவிதை முளைக்கிறது', 'ஒரு சிலுவை சுடப்படுகிறது', 'சத்திரக்காரன் நல்லவன்', 'ஏமாத்துப்பட்டி எலும்புக்கூடு', 'டாக்டர் டாக்டர் டாக்டர்', 'அம்மா பசிக்குதே', 'தேவனுக்கே மகிமை', 'அங்க பாக்காதீங்க', 'இங்கே பாருங்க', 'கல்', 'ஒன்றுபட்டால்', 'ஒன்றுமில்லை', 'நான்', 'உயிர்த்தெழுந்த ஆண்டவர்' ஆகிய நாடகங்களைக் கிறித்துவ நிறுவனங்களின் மேடைகளில் நிகழ்த்தியுள்ளார். மேலும் இவை குறு நாடகங்களாகத் திருவழிபாடுகளின்போது நிகழ்த்தப்பட்டதும் உண்டு.

வானொலி / தொலைக்காட்சி நாடகங்கள்

இவர் எழுதிய 'யாருங்க கொல்லப்போறது சாதியை'? 'கிறிஸ்துமஸ் பரிசு', 'ஒரு சீட்டுத்துணி' என்ற ஒலிச்சித்திரத் தொடரை லண்டன் பி.பி.சியிலும், 'இறைவன் இருக்கின்றானா'?, 'முன்னணையில்' ஆகிய நாடகங்கள் புதுவை வானொலியிலும் ஒலிப்பரப்பபட்டன. விஜய் தொலைக்காட்சியில் 'கல்வாரியை நோக்கி' என்கிற நாடகத் தொடரை 1996இல் இயக்கினார். கோமல் சுவாமிநாதனின் 'புதினங்கள்' திரைப்படத்தின் கதையாகும்போது அதனைத் திரைக்கதையாக்கும் உதவிகளை அவ்வப்போது செய்து கொடுத்துள்ளார்.

தலித் கலைவிழா நாடகங்கள்

1995இல் தலித் கலைவிழா தொடங்கிய ஆண்டில் இருந்து, பரட்டையின் நாடகங்கள் கலைவிழா மேடையில் அரங்கேற்றப்பட்டன. 'அங்கே பார்க்காதீங்க' (1996), 'கட்ட அவுறு கயித்த வுடு' (2001), 'சிட்டிங் பட்டாங்வே' (2002), 'பிச்சி எறீங்கடா' (2001), 'சாமி கொடுத்த வரம்' (2005) ஆகிய நாடகங்களை எழுதி இயக்கி நடித்துள்ளார்.

நாடகக் கருத்தியல்

இவரது ஒவ்வொரு நாடகமும் சமகாலப் பிரச்சனைகளைக் கணக்கில் கொண்டு அமைந்திருக்கும். நகைச்சுவையோடு இறையியலும் சமுதாயப் பார்வையும் இணைந்தோடும் கதையமைப்பைக் கொண்டிருக்கும். மார்க்சியம், பெண்ணியம் மற்றும் பெரியாரியம் என

மூன்றையும் நாடகக் கருவியின் ஊடாக ஓடவிடுவார். இவரின் நாடகங்கள் மிக எளிமையான அரங்கையும், பொருளாதாரச் சிக்கனத்தையும் பெற்றிருக்கும்.

பண்ணை அடிமைத்தனத்திலிருந்து தாழ்த்தப்பட்டோர் விடுதலை பெறவேண்டும் என்கிற கருத்துக்களை மையமாகக் கொண்டு 'ஒரு விதை முளைக்கிறது' என்கிற நாடகத்தைப் படைத்துள்ள இவர், பொருளாதார முன்னேற்றம் இல்லாமல் விடுதலை சாத்தியமில்லை என்கிறார். சமூக ஏற்றத்தாழ்வுகளைக் காட்டுவதற்காக நாடகத்தில் படிக்கட்டுகளைப் பயன்படுத்திக் காட்சிப்படுத்தியதோடு, கந்தைகள், நூறு ரூபாய் நோட்டு, சின்ன அங்கி பெரிய அங்கி எனப் பாத்திரங்களைப் படைத்து 'அம்மா பசிக்குதே' என்னும் நாடகத்தைப் படைத்துள்ளார். சாதியில்லாச் சமுதாயத்தை உண்டாக்கச் சாதி மறுப்புத் திருமணம் தேவை என்னும் கருத்தை முன்வைத்துத் தாழ்த்தப்பட்டோருக்கும், தேவர்க்கும் முதுகுளத்தூர் வீராம்பல் பகுதியில் நிகழ்ந்த சாதி மோதல்களை மையப்படுத்தி, ஒரு சிலுவை சுடப்படுகிறது என்கிற நாடகத்தை எழுதியுள்ளார். ஏமாத்துப்பட்டி எலும்புக்கூடு நாடகத்தில் நகைச்சுவை நடிகர் வழி, தலித் மக்களின் உட்சாதிப் பிரச்சனைகளைப் பேசித் தலித் மக்களின் ஒருங்கிணைப்பை வலியுறுத்தியுள்ளார். 'விடாது சிரிப்பு' (2002) நாடகத்தில் சாதி அமைப்பைச் சாதி வேறுபாடுகளை களைந்து, தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் இணைப்பு, கருத்துப் புரட்சியால் சாதியை ஒழித்தல் வேண்டும் என்கிற கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

மேலும் தலித் உட்சாதி முரண்களைக் களைதல், இந்துத்துவ அடையாளங்களிலிருந்து மீளுதல், சாதி மறுப்புத் திருமணம், மனிதர்களாகத் தலை நிமிர்வது போன்ற தலித் விடுதலைக் கருத்துக்களை இவரது நாடகங்கள் பேசுகின்றன. எந்தச் சினிமாக்காரனும் அரசியல்வாதியும் தலித் மக்களுக்குச் சாதிய வன்கொடுமைகள் நிகழ்கிறபோது கண்டித்து வாய்த்திறப்பதே இல்லை. எனவே மக்கள் பிரச்சனை நாடகமாக்கப்பட்டு மக்கள் மொழியில் சமுதாயத்தை நோக்கிச் செல்ல வேண்டுமென்கிறார்.

நாடக நெறியாளுமை

தொழிலாளர் மற்றும் விவசாயிகள் கூட்டமைப்பில் கலை இலக்கியப் பண்பாட்டுப் பிரச்சாரக் குழுவான, நிதர்சனம் குழுவைக் கொண்டு சில நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். சிட்டிங் பட்டாங்வே, கட்ட அவுறு கயித்த வுடு, பிச்சி எறீங்கடா போன்ற நாடகங்கள் இவரது நெறியாளுகையைக் கொண்டு நிகழ்த்தப்பட்டவை. 2005ஆம் ஆண்டு தலித் கலை விழாவில் சென்னை துடி குழுவினர் நிகழ்த்திய 'பாப்பாப்பட்டியை மறந்த பராசக்தி' நாடகமும் இவரின் நெறியாளுகையில் நிகழ்த்தப்பட்டது.

சாதி மறுப்பே தலித்தியக் கோட்பாடு என முன்மொழியும் பரட்டை தனது நாடகங்களில் தலித் அல்லாதவர்களும் முக்கியமான (பொருத்தமான) பாத்திரங்களில் பங்கேற்று நடிக்கத் தொடக்க காலம் முதல் வாய்ப்பளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் ஆதிக்கச் சாதியினர் குழுக்களில் இவ்வாறு தலித்துகள் இடம்பெற்றதில்லை என்கிறார் தலித் குறும்பட தயாரிப்பாளரான ஓம்பிரகாஷ்.

நாடகப் பயிற்சிப் பட்டறை

தொடர்புத்துறையின் வழியாக நாடகப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியவர். சென்னையில் உள்ள இயேசுசபை இறையியல் கல்லூரி, கிறித்தவ இலக்கியச் சங்கம், கொடைக்கானல் அருட்சகோதரிகள் பயிற்சி மய்யம், கடலூர் ஆற்காடு லுத்ரன் திருச்சபை ஆதார மய்யம் மற்றும் பல தன்னார்வ இயக்கச் செயல்பாட்டாளர்களுக்கு நாடகப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தியுள்ளார்.

தலித் நாடக முன்னோடி பரட்டை

ஓர் அரசியற் சிந்தனையாக அறுபதுகளின் பிற்பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், சுரண்டப்படும் மக்களுக்கும் ஆதரவாக உலகெங்கும் ஒருமைப்பாட்டு இயக்கங்கள் தோற்றம் பெற்றபோது விடுதலை அரங்குகள் உருவாயின.

ஈழச் சமூகத்தில் 1969இல் நெல்லியடி அம்பலத்தடிகளின், கந்தன் கருணை நாடகத்தில், தன் கோயிலுக்குள் புகுவதற்காக கோயிலுக்கு வெளியே நின்று போராடும் தாழ்த்தப்பட்ட

மக்களுக்குக் கந்தனே தன் சக்தி வாய்ந்த வேலைக் கொடுத்துப் போராடத் தூண்டுவதாக அமைந்துள்ளது. தமிழகத்தில் பரட்டை 1975இல் 'ஒரு புல்லாங்குழல் அடுப்பு ஊதுகிறது' என்னும் நாடகம் தொடங்கி, 2005இல் சாமி கொடுத்த வரம் நாடகம் வரை தலித் மக்களின் வாழ்வியல் சார்ந்த கருத்தியல்களோடு 30க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி, இயக்கி நடித்துள்ளார்.

தொடர்புத் துறையின் மூலமாக 'நடமாடும் நாடக அரங்கு' (Mobile Theatre) ஒன்றை உருவாக்கி இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நாடகச் செட்டுக்கான கருவிகளை வாங்கிப்போட்டுத் தெருத் தெருவாகத் தலித் பண்பாட்டு விழிப்பு நிலையைப் பரப்பி வந்தார். 1988இல் நடிக்க நாடகம் எழுதுவது எப்படி? என்கிற நூலை வெளியீடு செய்து, தமிழ் நாடக வரலாற்றிலே தனக்கென முத்திரையைப் பதித்தார். இதற்கு அடையாளமாக தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் நிரந்தர மாந்தோப்பு மேடை ஒன்று உருவாக்க காரணமானார்.

ஆதிக்கச் சாதியினரால் புறக்கணிக்கப்பட்ட கூத்து, இசைக்கருவிகள், சிறுதெய்வ வழிபாட்டு மரபு, கலைகள் போன்றவற்றை அறிஞர் அம்பேத்கர் நூற்றாண்டு எழுச்சிக்குப் பிறகுதான் ஒடுக்கப்பட்ட மக்கள் மீட்டெடுத்து வருகின்றனர். நாடகம் எழுதுதல், நடித்தல், இயக்குதல், பாடல் இயற்றல், இசை அமைத்தல் எனப் பல பரிணாமங்களைக் கொண்ட பரட்டை 1975முதல் 2005வரை தலித் நாடக முயற்சிகளில் ஈடுபட்டு நிகழ்த்தி வந்தமையால் இவரை தலித் நாடகத்தின் முன்னோடி என உறுதியாகக் குறிப்பிடலாம். தலித் விடுதலையில் புதிய அதிகாரத்தையும், புரட்சிகர அலைகளையும் உருவாக்கித் தனிமனித வரலாற்றில் ஒரு பண்பாடாக, இலக்கியமாக வாழ்ந்தவர் இவரே.

பரட்டையின் நாடகச் சிறப்பு

- பரட்டையின் மொழி, சென்னையிலுள்ள நகர்வாழ் தலித்துக்களின் மொழி என்று சொல்லப்படுகிறது. சரியாகச் சொல்வதென்றால் மதுரை வட்டார மொழியை உள்ளடக்கிய சென்னை தலித்துக்கள் மொழி என்பதே சரி. மதுரையின் வட்டார மொழியிலுள்ள தனி அடையாளச் சொற்கள் அவர் நாடகங்களில் பரவலாக இருப்பது இதை உறுதி செய்கிறது. இப்படி முழு தனித்துவத்துடன் இயக்கியவர் பரட்டை மட்டுமே.
- மதம் மாறி விடுவதனால் மட்டும் ஒரு தலித்தின் மீது சமூகத்தில் நடத்தப்பட்ட தீண்டாமைகள் ஒழியவில்லை என்பதையும்,அதற்காகத் தலித்துக்களை முன்வைத்து ஒரு சிலுவை சுடப்படுகிறது நாடகத்தில் பரட்டை கையாளும் பாத்திரங்கள் என்றைக்கும் நம்மோடு இருந்து வழிகாட்டும்படி இருக்கிறது.
- தலித்தியத்திற்கு எதிரான கம்யூனிஸ்ட்களை விமர்சிக்கும் விடாது சிவப்பு நாடகத்தில் சுயவிமர்சனத்தையும் முன் வைக்கிறார் பரட்டை. தலித்துக்களுக்குள் உள்ள உட்சாதி முரண்களைக் களைந்தெறிய வேண்டிய அவசியத்தையும், தலித் பெண்ணிய நோக்கையும் ராஜா ராணி பாத்திரம் மூலம் அவர் சொல்லும் விதம் எந்தச் சமயத்திலும் யாரும் பயன்படுத்தும்படியான தன்மைக் கொண்டது. தலித் அரங்கியலைக் கையிலெடுக்கும் எந்த ஒரு நபரும் இந்தப் பாத்திரத்தன்மையை முதலில் உள்வாங்கிச் செயல்படுவது பிரதான அவசியமாகவே உள்ளது.
- சிலுக்கு ரசிகன் என்ற பெயரில் அவர் எழுதி வந்திருக்கிறார். ஆனால் தலித்திய ஆணாதிக்கத்திற்கு எதிராகத் தன் நாடகங்களில் உருவாக்கிய காட்சிகள் மிகுந்த நுண்திறன் மிக்கவை. காலத்தால் அழிக்க முடியாதவை. பெண்கள், குழந்தைகள் மீது அவருக்குள்ள சமுதாய அக்கறை, படைப்பாளுமையைத் தாண்டி வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.
- தினசரி வாழ்வில் தலித் மக்கள் சந்திக்கும் நிகழ்வுகளை அவர்களின் வேரான கலாச்சாரத்தோடே தன் நாடகங்களில் உலவவிட்டு, அவர்களின் உளவியலை உலகமறியச் செய்ததில் பரட்டைக்கு இணையாக யாருமே இல்லை என்பதும் உறுதியாகச் சொல்லலாம்.

- நாடகம் எழுதும்போதே நாடகத்திற்கான அரங்கு,உடை,ஒளி மற்றும் ஒலி, பயன்படும் சாதனங்கள், அரங்கக் குறிப்புகள், ஊடகங்களில் அதனைப்பற்றி வெளிப்படுத்த வேண்டிய விதம் என எல்லாவற்றையும் வரைபடமாகவே குறித்துவிடும் பரட்டையின் தன்மை தலித் அரங்கியலின் முன்னோடி என்பதற்கு அச்சாரமாக்குகிறது.
- தனது எல்லாப் படைப்பிலும் அறிவர் அம்பேத்கரின் கருத்தியலைப் பரப்பும் சமூகக் கலகக்காரராகவே பரட்டை வாழ்ந்து வந்தது கவனிக்கத் தக்கது.

*“நடக்கும் என்ற நம்பிக்கையோடு*

*நடந்தே ஆகவேண்டும் என்ற உறுதியோடு”*

என்ற பரட்டையின் வார்த்தைகள் எல்லா அரங்கியல் முயற்சியாளனுக்கும் மாபெரும் கலக வார்த்தைகளாகவே தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கும்.

முடிவுரை

பரட்டையின் நாடகம் சமகாலப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு மக்கள் மொழியில் நகைச்சுவையோடு இறையியலும் சமுதாயப் பார்வையும் இணைந்த கதையம்சம் அமைந்திருக்கும். நாட்டுப்புறக் கலை வடிவங்கள், கதைபாடல்கள், தெருக்கூத்து, மற்றும் நாடகங்கள் ஊடாக மார்க்சியம், பெரியாரியம், பெண்ணியம், கருத்தியல்களை வெளிப்படுத்துவார். அறிவர் அம்பேத்கரின் நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தலித் விடுதலைப் பார்வையில் தலித்திய நாடகங்களை எழுதி இயக்கி நடித்து, நிகழ்த்தி வந்தமையால் பரட்டையைத் தலித்திய நாடக முன்னோடி என உறுதிப்படக் கூறலாம்.

உசாத்துணை

அன்பு செல்வம், (2005) பரட்டை ஒரு பண்பாடு, தலித் ஆதார மய்யம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி வெளியீடு, மதுரை.

பரட்டை, (2002) பரட்டையின் டாவு, தலித் ஆதார மய்யம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி வெளியீடு, மதுரை.

பரட்டை, பிரிட்டோ, (1998) நடிக்க நாடகம் எழுதுவது எப்படி? வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.

பரட்டையின் நண்பர்கள், (2000) பரட்டை..? தமிழ்நாடு இறையியல் கல்லூரி வெளியீடு, மதுரை.

முத்து, கே.எஸ்., (2005) தமுக்கு இதழ் (ஏப்-ஜீன்) (பதி.ஆ), தலித் ஆதார மய்யம், வெளியீடு, மதுரை.

ஜோனாஸ் அற்புதராஜ், (1997) பரட்டையின் பாடல்களில் விடுதலைக் கருத்துக்கள், தமிழ்நாடு இறையியல் கல்லூரி வெளியீடு, மதுரை.

*James Theophilus Appavoo, (1986) Folklore for Change, T.T.S. Publications, Madurai.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********